**விடயத் தலைப்பு 408**

**பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சு**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சின் 2020 டிசம்பர் 31 ஆம் இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் 154(1) அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்டோபர் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சு வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சு நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2187/27 ஆம் இலக்கமுடையதும் 2020 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானிப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரம்பு, பித்தளை, மட்பாண்டங்கள், மரச்சாமான்கள் மற்றும் கிராமப்புற தொழில்துறை மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப் பட்டமையால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் நேரொத்துள்ளதாக இருக்கிறதென பிரஸ்தாபிக்க முடியாது. மேலும் முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேவைப்பாடு இல்லை என்பதால் என்னுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| 2187/27 ஆம் இலக்கம் மற்றும் 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் 09 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இவ் அமைச்சு ஸ்தாபிக்கப் பட்டது என்பதால் முன்னைய ஆண்டு மீதிகள் காணப்படாத போதிலும், நிதி நிலைமை அறிக்கையின் முன்னைய ஆண்டு மீதி ஒன்று காட்டப் பட்டிருந்தது. | மீதி ஒன்று காட்டப் பட்டிருப்பதானது தவறுதலாக இடம் பெற்றுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. | அமைச்சு 2020 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் நிறுவப்பட்டது என்பதால் முன்னைய ஆண்டு மீதி பேணப்படுவது சாத்தியமற்றது. |

#### 1.6.2 நிதிப்பாய்ச்சல் அறிக்கை

| கணக்காய்வ அவதானிப்புகள் | கணக்கியல் உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் நிதி அறிக்கைகளின்படி முற்பணக் கொடுப்பனவுகளை அறவிடுதல் மற்றும் செலுத்துதல் முறையே ரூ.70,175,824 ஆகவும் ரூ.72,301,579 ஆகவும், நிதி அறிக்கையில் அது ரூ. 2,049,379 ஆகவும், ரூ. 4,175,133 ஆகவும், குறிப்பிடப் பட்டிருந்தது. | நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படும்போது இறுதி 4 மாதங்களுக்கான முற்பணக் கணக்கிற்கு பணமாகக் கிடைத்த மற்றும் பணமாகச் செலுத்தப்பட்ட தொகைகள் மாத்திரம் கணக்கில் எடுக்கப் பட்டுள்தாக அறிவிக்கப் பட்டது. | நிதிக்கூற்று தயாரிக்கப்படுவதற்கு பயன்படுத்தப்பட வேண்டிய மாதிரிப்படிவத் துக்கு அமைய நிதிப் பாய்ச்சல் கூற்று மொத்த அடிப்படையில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2. நிதிப் பகுப்பாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வ அவதானிப்புகள் | கணக்கியல் உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுத் தலைப்புகள் 09 மற்றும் 11 க்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செலவுகள் முறையே மொத்தமாக ரூ.7,330,000 தொகை ஒதுக்கீட்டில் ரூ.1,417,347 மற்றும் ரூ.4,023,259 என்ற வகையிலும் ரூ.5,440,606 பயன்படுத்தப் பட்டிருந்தது. அது ஏற்பாடு செய்யப்பட்ட நிகர ஒதுக்கீட்டின் நூற்றுக்கு 34 வீதம் முதல் நூற்றுக்கு 100 வீதம் வரை இடைவெளிகள் காணப்பட்டன. | ஆவதானிப்பை ஏற்றுக் கொள் வதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | நி.பி.கு 50 (11) இன் பிரகாரம் வருடாந்தச் செலவு மதிப்பீடு தயாரிக்கப் படும்போது மதிப்பீட்டை இயலுமானவரை சரியாகத் தயாரிக்க வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கியல் உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02.⁚.2020 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதுடன் தொடர்புடைய அரச கணக்கியல் திணைக்களம் 2020 ஒக்டோபர் 09 ஆம் திகதி வெளியிட்ட வழிகாட்டற் கோவையின் 06 ஆம் இலக்கத்தின் 3.4 ஆம் பந்திக்கு அமைவாக, குறிப்பு இலக்கம் ஐஐஐ இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடன்பாட்டுக் கூற்று திரைசேரியால் ஒவ்வொரு செலவுத் தலைப்புகளின் பேரிலும் விடுவிக்கப்படும் கடன்பாடுகள் உடனான பொறுப்புக் கூற்றுகள் உடன்பட வேண்டும் எனினும், அவ் ஆவணங்கள் இரண்டுக்கும் இடையில் ரூ. 4,272,846 வித்தியாசம் காணப்பட்டது. | விதாதாசம்பத் நிலையங்களின் முன்னைய வருடங்களுக்குறிய பொறுப்புக்களை குறித்த தினத்துக்கு முன் அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் குறித்தவாறு கிடைக்காத காரணத்தாலும் சில பொறுப்புக்களுக்கு குறித்த செலவுத் தலைப்புகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை போதாத காரணத்தால் குறித்த தினத்துக்கு முன் ஊஐபுயுளு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் திரைசேரிக்கு அறிக்கையிடுவதற்கு முடியாமல் போய்விட்டது. ஆகையால் குறித்த தினத்துக்கு பின்னரும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் படுவதற்கு முன் எங்களுக்கு அறிக்கை யிடப்பட்டிருந்த பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்கள் மூலம் சமர்ப்பிக் கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. அவ்வாறு ஆகையால் திரைசேரி மூலம் பிறப்பிக்கப்படும் பொறுப்புக்கள் மற்றும் கடன்பாட்டுக் கூற்று வித்தியாசப் படுகின்றது. | வழிகாட்டற் கோவையின் 06 ஆம் இலக்கத்தின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம், குறிப்பு இலக்கம் ஐஐஐ இன் கீழ் குறிப்பிடப்படும் பொறுப்புக்கள் மற்றும் கடன்பாட்டுக் கூற்று திரைசேரியினால் ஒவ்வொரு தலைப்புகளின் கீழும் தீர்க்கப் படும் உரிய பொறுப்புக்கள் மற்றும் கடன்பாட்டுக் கூற்றுடன் இணங்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 94(1) இன் பிரகாரம் செலவுத் தலைப்புகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங் களைவிட அதிகமான பொறுப்புக்கள் உருவாகியுள்ளன. எனினும், மீண்டெழும் செலவினத் தலைப்புகள் 09 இன் மீதிகளாக ரூ. 217,526 உள்ளபோதிலும் அதனை விடவும் கூடதலாக மொத்தம் ரூ. 3,854,576 தொகை பொறுப்புக்களாக உள்ளன. | வருடத்தின் 04 மாத காலத்துக்கு மாத்திரம் போதுமான நிதி ஒதுக்கம் ஒதுக்கித் தரப்பட்டதுடன் விதாதா நிலையங்களுக்கு குறித்த வருடத்தின் ஜனவரி மாதம் தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலங்களுக்கு உரித்தான தீர்க்கப்படாத அதிகமான விலைப் பட்டியல்களுக்கு பணம் செலுத்த வேண்டிய நிலைமை உருவாகியது. இந் நிலைமையின் காரணமாக எஞ்சியிருக்கும் நிதி ஒதுக்கத்தின் அளவைவிட அதிகமான பொறுப்புக்கள் உருவாவதற்கு காரணமாக அமைந்ததென அறிவித்துள்ளனர். | செலவுத் தலைப்புகளுக்கு ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிதி ஒதக்கத்தை விட அதிகமாக பொறுப்புகள் உருவாக்கப்படக் கூடாது. |
| **(இ)** | மதிப்பீட்டாண்டுக்கு உரிய ரூ. 142,612 க்கான பொறுப்புக்கள் அமைச்சின் நிதி அறிக்கைக் குறிப்பின் குறிப்பு இலக்கம் ஐஐஐ இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடன்பாட்டுக் கூற்றில் காட்டப்படவில்லை. | அமைச்சின் கீழ் செயற்படும் விதாதா ஸம்பத் நிலையங்கள் நாடு முழுவதும் அமைந்தள்ள பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நிறுவப் பட்டுள்ளதுடன் இவ்வமைச்சு புதிதாக உருவாக்கப் பட்டதன் காரணமாக தகவல் களைப் பெற்றுக் கொள்ளவதில் கடினத் தன்மைகளும் காணப்பட்டன. ஆகையால் சரியான முறையில் பொறுப்புக்கள் பதியப் படாததன் காரணமாக அறிக்கையிடல் விடயங்களை செய்ய முடியாமல் போனது எனினும் பிறகு கண்டுபிடிக்கப்பட்ட பொறுப்புக்கள் எனினும் குறித்த அலுவலக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கான தேவைகளின் நிமித்தம் அவற்றை தீர்க்க வேண்டியிருந்தது. | வருடத்துக்குரிய சகல பொருப்புக்களும் நிதி அறிக்கைகளில் உட்படுத்தப்பட வேண்டும். |

## 2.3 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கியல் உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | தாபனவிதிக் கோவையின் ஓஓஐஏ ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு சட்டமா அதிபரின் அறிவுரைக்கு அமைய பணியாற்ற வேண்டும் எனினும், கூட்டு மொத்தம் ரூ. 451,582 ஆகவிருந்த கடன் மீதிகள் சம்மந்தமாக அவ்வாறு பணியாற்றி இருக்கவில்லை. | கடன் மிதிகள் அறவிடப்படுவது சம்மந்தமாக இதற்கு முன்பிருந்த அமைச்சின் உத்தியோகத் தர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு குறித்த ஆவணங்களை பரீட்சித்துப் பார்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | தாபன விதிக் கோவையின் ஓஓஐஏ ஆம் அத்தியாயத்தின் 04 ஆம் பந்தியில் குறிப் பிடப் பட்டுள்ளவாறு பணியாற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையில் 118 ஆம் இலக்கத்தின் 1.1.7 ஆம் பந்திக்கு அமைய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்று வந்து 02 மாதம் கழிந்ததன் பின் அல்லது உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்று 03 மாதங்கள் கழிந்த பின் திணைக்களங் களுக்கிடையில், தீர்ப்பனவு செய்யப்படாத கடன் மீதிகள் இருக்கக் கூடாது எனினும், ரூ. 248,701 க்கான அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்யப் பட்டிருக்கவில்லை. | குறித்த தகவல்கள் முன்பிருந்த திறன் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்டு அந்த கடன் மீதிகள் தீர்ப்பனவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப் பட்டிருந்தது. | 2004 ஒக்டோபர் 11 ஆம் வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையில் 118ஆம் இலக்கத்தின் நியமங்களுக்கு அமைய பணியாற்ற வேண்டும். |

## 3. நடவடிக்கை மீழாய்வு

### 3.1 கடப்பாடுகளை நடைமுறைப் படுத்தமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கியல் உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மரக் கம்பு மற்றும் மரக் கம்பு சார்ந்த உற்பத்தி நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டு ரூ. 2,470,000 க்கான நிதி ஒதுக்கம் செய்யப் பட்டிருந்தபோதிலும் அத்தொகையில் ரூ.470,125 மட்டுமே பயன்படுத்தப் பட்டிருந்தது. ஆகையால் மதிப்பீட்டாண்டில் திட்டமிடப் பட்டவாறு பணிகளை மேற்கொள்வதற்கு நாட்டில் நிலவிய நோய்த் தொற்று நிலைமையின் கீழ் முடியாமல் போயுள்ளதுடன் 2021 ஜுன் 30 ஆம் திகதியன்றளவிலும் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு பத்திரமொன்று மாத்திரமே சமர்ப்பபிக்கப் பட்டிருந்தது. | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் மற்றும் மொரட்டுவ பல்கலைக் கழகம் ஆகியவற்றை இணைத்துக் கொண்டு திறன் அபிவிருத்தி தொழிற்கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கீழ் ஊமுளுவுஜ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மரக்கம்பு சார்ந்த கைத்தொழில் அபிவிருத்தி என்ற விடயத் தலைப்பும் இவ் அமைச்சிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. மேலும் அப் பல்கலைக் கழகங்களால் மேற் கொள்ளப்பட்ட பணிகளுக்கான வவுச்சர்களை 2020.12.28 ஆம் திகதிக்கு முன் அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டபோதிலும் அவை சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. அதேபோல் எதிர்பார்க்கப்பட்ட கால வரையறைக்குள் பணியாற்றுவது பிரச்சினைக்குறியதாக மாறியதால் அமைச்சினால் பணம் செலுத்தப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை ஒவ்வொறு துணை பணிகள் மூலம் அடையாளம் கண்டு அவற்றுக்கான செலவுகள் மற்றும் திட்மிடப்பட்ட கால அளவுக்காக ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக ஏற்பட்ட தாமதங்களைத் தவிர்க்க முடியும். |

## 4. நிலையான அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்ளல்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கியல் உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| **(அ)** 2030 நிகழ்சி நிரலின்படி 2030 ஆம் ஆண்டளவில் செயற்படுத்தப் படுவதற்கு 04 இலக்குகளை அமைச்சு இனங்கண்டுள்ள போதிலும், அந் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான இலக்குகள் உறுதியாக குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக அமைச்சினால் இலக்கு இனங்காணப்பட்ட போதிலும், உறுதியாக அவ் இலக்குகளை குறிப்பிடுவதற்கு முடியாமல் போனதை ஏற்றுக் கொண்டுள்ளனர். புதிய அமைச்சொன்றாக நிறுவப்பட்டு மூன்று மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தின் மூலம் அவ் இலக்குகள் அடையப்படும்போது அமைச்சிடம் போதுமான அளவு தரவுகள் காணப்படாத காரணத்தால் இலக்குளை உறுதியாகவோ அளவுரீதியாகவோ வெளிப்படுத்த முடியவில்லை என அறிவிக்கப் பட்டிருந்தது. | இனங்காணப்பட்ட நோக்கங்களை நிரைவேற்றிக் கொள்வதற்கு இலக்குகளை உறுதியான இனங்கண்டு கொள்ள வேண்டும். |
| **(ஆ)** இனங்காணப்பட்ட நோக்கங்கள் அடைந்து கொள்ளப் படுவதன் வளர்ச்சிப் போக்கை அளவிடுவதற்கான அடிப்படை வருடம் ஒன்று மற்றும் அவ் வருடத்தில் நிலவிய நிலைமைகள் அடிப்படை தரவுகளாக இனங்கண்டிருக்க வேண்டும் எனினும் அவ்வாறு செய்யாது மதிப்பீட்டாண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட வளர்ச்சி வீதம் நூற்றுக்கு 0 வீதத்துக்கும் 49 வீதத்துக்கும் இடைப்பட்டதாக காணப் படுவதாக வருடாந்த செயறல்திறன் அறிக்கையில் இடம்பெறச் செய்துள்ள காரணத்தால் அவ் வளர்ச்சி வீதங்களின் உண்மைத் தன்மைகளை உறுதிப்படுத்த முடியாமல் போயுள்ளது. | அமைச்சினால் இனங்காணப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அதன் வளர்ச்சிப் போக்கை அளவிட்டுப் பார்ப்பதற்கு அடிப்படை வருடம் ஒன்றையும் அவ் அடிப்படை வருடத்தில் தரவுகளின் அடிப்படையில் நடைமுறை ஆண்டின் வளர்ச்சி குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும். எனினும் அமைச்சில் விடயப் பொருளுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக அடிப்படை தரவுத் தொகுதி ஒன்று அமைச்சிடம் காணப்படாத காரணத்தால் அவ்வாறு செய்ய முடியாமல் போயுள்ளது. எனினும் தற்போதைய நிலையில் குறித்த தரவுகள் சேகரிக்கப் பட்டு வருவதுடன் அடிப்படை தரவுத் தொகுதியொன்று தயாரிக்கப்படும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது என குறிப்பிடப் பட்டிருந்தது. | இனங்காணப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான வளர்ச்சிப் போக்கை அளவீடு செய்து கொள்வதற்கு அடிப்படை வருடம் ஒன்றையும் அவ் வருடத்தில் காணப்பட்ட நிலைமைகள் அடிப்படைத் தரவுகளாக இனங்காணப்பட வேண்டும். |

**5.** **மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கியல் உத்தியோகத்தரின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்றைக்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தற்போது கடைமையில் உள்ள உத்தியோகத்தர் குழுவின் கலவையைப் பார்க்கும் போது சிரேஷ்ட மற்றும் இரண்டாம் நிலை பதவிகளின் வெற்றிடங்கள் முறையே 08 மற்றும் 107 ஆக காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர் குழுவின் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு அரச சேவைகள், மாகான சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் வேண்டுகோல் விடுக்கப் பட்டுள்ளன. | தேவையான பதவிகளை கருத்திற் கொண்டு பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |